புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • அக்டோபர் (OCTOBER) 08, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 41 • விலை(PRICE) ரூ.6.00

# உயர்கல்வி நிறுவனங்களில் ஜாதிப் பாகுபாடுகளால் தற்கொலை அதிகரிப்பு

அய்.அய்.டி, அய்.அய்.எம் போன்ற பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த உயர்கல்வி நிறுவனங்களில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மீது ஜாதிப் பாகுபாடு காட்டப்படுவதாக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வருகின்றன.

அண்மையில் பம்பாய் அய்.அய்.டி-யில் ஒரு தலித் மாணவன் தற்கொலையைத் தொடர்ந்து ஒரு பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2020-21 முதல் 2024-25 வரை 23 அய்.அய்.டி-களில் 45 மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர். அவர்களில் 9 பேர் தலித் மாணவர்கள்; 7 பேர் பழங்குடி மாணவர்கள்; 12 பேர் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்.

**உச்சநீதிமன்ற ஆய்வுக்குழு அதிர்ச்சி தகவல்**

2025 ம் ஆண்டு உச்சநீதிமன்றம் மாணவர்கள் தற்கொலைக்கான காரணங்களை ஆராய பணிக்குழு அமைத்து உத்தரவிட்டது. ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி எஸ். ரவீந்திர பட் தலைமையில் தேசிய பணிக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு நாடு முழுவதும் கல்வி நிலையங்களில் ஆய்வு நடத்தியது. ஆய்வின் முதல் கட்ட அறிக்கையில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில், உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களில் சுமார் 15% பேர் கடந்த ஆறு மாதங்களில் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இதில் பங்கேற்ற மாணவர்களில் 9% பேர் தங்களுக்கு தற்கொலை எண்ணங்கள் வந்ததாக தெரிவித்துள்ளனர். 34% மாணவர்கள் தங்களை வளாகத்தில் ஒரு அன்னியராக ஒதுக்கி வைக்கப்படுவதாக உணர்வதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜாதி ரீதியான அவமதிப்புகள், ஜாதி அடுக்குத் தரவரிசை அடிப்படையிலான பாகுபாடுகள் தான் தற்கொலை முடிவுக்கான காரணங்கள் ஆகும் என்று பணிக்குழு தனது ஆய்வில் கூறியுள்ளது. 56 % மாணவர்கள், கடுமையான பிரச்னைகளைத் தங்கள் நிர்வாகம் நியாயமாகக் கையாளும் என்று நம்புவதாக கூறினர். 32 % பேர் கல்வி நிறுவனங்கள் தங்களுக்கான உளவியல் ஆலோசனை சேவைகளை வழங்கவில்லை என்று புகார் தெரிவித்தனர். 2.43 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றனர். பங்கேற்றவர்களில் சுமார் 67 % பேர் தலித், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

## உ.பி அரசு திட்டத்தில் ஊழல்: பசு ‘கோமியத்தில்’ எருமை ‘கோமியம்’ கலப்படமாம்!

“உத்தரப் பிரதேசத்தில் அரசுத் திட்டத்தின் கீழ் பசு மாட்டுச் சாணம் மற்றும் கோமியம் (மூத்திரம்) கொள்முதல் செய்யும் அல்லது பயன்படுத்தும் விநியோகத்தில், சிலர் பசு மாட்டிற்குப் பதிலாக எருமை மாட்டின் மூத்திரத்தை கலப்படம் செய்து வழங்கியதாகக் கூறப்பட்ட நிகழ்வு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உத்தரப் பிரதேச அரசு ‘புனிதமான’ பசு மாடுகளின் கழிவுகளான சாணம் மற்றும் கோமியத்தை விவசாயிகளிடமிருந்து வாங்கும் திட்டங்களையும் கூட்டுறவு அமைப்பு வழியாக செயல்படுத்தி வருகிறது.

பசு மாட்டுக் கோமியத்திற்கு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட இயற்கை விவசாயக் கொள்முதல் மய்யங்களிலிருந்தோ நல்ல விலை கிடைப்பதைப் பயன்படுத்தி, சிலர் அதிகளவில் எருமை மாட்டு மூத்திரத்தை பசு மாட்டு கோமியத்துடன் கலந்து விநியோகம் செய்தது கண்டறியப்பட்டது. எருமை மாடுகள் அதிகளவில் சிறுநீர் வெளியேற்றுவதால், குறுகிய காலத்தில் அதிக அளவு கோமியத்தைச் சேகரித்து முறைகேடாகப் பணம் சம்பாதிக்க இந்த முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் கோமியத்தின் அடர்த்தி, நிறம் மற்றும் இரசாயன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வுகளில், விநியோகிக்கப்பட்ட கோமியத்தில் எருமை மாட்டின் மூத்திரம் பெருமளவில் கலக்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. குறிப்பாக இட்டா, மீரட், ஜல்னோர் மற்றும் உ.பி முதலமைச்சரின் சொந்த மாவட்டமான கோரக்பூரில் உள்ள பசு சிறுநீர் கொள்முதல் மய்யங்களில் இந்த மோசடி நடந்துள்ளது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்த ஏமாற்று வேலையில் ஈடுபட்ட நபர்கள் மற்றும் போலி விநியோகஸ்தர்கள் மீது அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்ததுடன், கொள்முதல் மய்யங்களில் கோமியத்தின் தரத்தைப் பரிசோதிக்கச் சிறப்பு வழிகாட்டுதல்களையும் வெளியிட்டனர்.

உத்தரப் பிரதேச அரசு அறிமுகப்படுத்தியுள்ள முன்னோடித் திட்டத்தின் கீழ், பசுமாட்டுக் கோமியம் லிட்டருக்கு ரூ.10 என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறதாம். குறிப்பாக நாட்டுப்பசு இறக்குமதிப்பசு கலப்பட இனப்பசு என மூன்று ரகம் இந்தியாவில் உள்ளதால் எந்தப்பசுவின் மூத்திரம் வாங்கவேண்டும் என்ற சரியான வழிகாட்டுதல் இல்லை, ஆகையால் கால்நடை உரிமையாளர்கள் எருமை மூத்திரத்தையும் கலந்து கொடுத்துவிடுகின்றனர். மேலும் கொள்முதல் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை, ஆகவே அவர்களும் கொண்டுவரும் மூத்திரம் எல்லாம் பசு மூத்திரம் என்று நம்பி வாங்கி அதற்கான தொகையைக் கொடுத்து வருகின்றனர்.”

**அறிவியல் மருத்துவம் என்ன கூறுகிறது?**

★ பசுமாட்டு கோமியத்தில் பல்வேறு வகையான பாக்டீரியாக்கள் மற்றும் கிருமிகள் இருப்பது அறிவியல் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. முக்கியப் பாக்டீரியாக்கள் & கிருமிகள்

★ எஸ்செரிச்சியா கோலை (*Escherichia coli* - *E. coli*): வயிற்றுப்போக்கு, குடல் தொற்றுகள் மற்றும் சிறுநீரகப் பாதை தொற்றுகளை (UTI) ஏற்படுத்தக்கூடிய பாக்டீரியா.

★ புரூசெல்லா (*Brucella species*): ‘புரூசெல்லோசிஸ்’ (Brucellosis) என்ற காய்ச்சலை உண்டாக்கக்கூடியது. இது மாடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய ஆபத்து கொண்டது.

★ லெப்டோஸ்பைரா (*Leptospira*): எலிக்காய்ச்சல்/மாட்டுக்காய்ச்சல் (Leptospirosis) போன்ற தீவிரமான தொற்றுகளை உருவாக்கும் கிருமி.

★ சால்மோனெல்லா (*Salmonella*): கடுமையான வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் உணவு நஞ்சாதல் (Food Poisoning) போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

★ ஸ்டேஃபிளோகோக்கஸ் aureus (*Staphylococcus aureus*): பிடித்தலை உண்டாக்கக்கூடிய பாக்டீரியா

★ கிளெப்ச iella (*Klebsiella*) & புரோட்டீயஸ் (*Proteus*): சுவாசப் பாதை மற்றும் சிறுநீரகப் பாதையில் அழற்சியை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள்.

இந்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் (IVRI - Indian Veterinary Research Institute) ஆய்வுகளின்படி, புதிய மற்றும் பதப்படுத்தப்படாத பசுவின் சிறுநீரில் மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 14 வகையான பாக்டீரியாக்கள் வரை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, சுத்திகரிக்கப்படாத மாட்டு மூத்திரத்தை நேரடியாகப் பயன்படுத்துவது அல்லது அருந்துவது தொற்றுநோய்களுக்கு வழிவகுக்கும் என வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். இதைச் சொன்னால் கோமாதா பக்தர்கள் மனம் புண்படுகிறது என்று கூக்குரலிடுவார்கள்.

## வைக்கம் நினைவிடத்தில் பெரியார் பிறந்தநாள் விழா

பிற்படுத்தப்பட்ட ஊழியர்கள் பேரமைப்பின் (National Confederation of OBC Employees Welfare Associations) சார்பில் வைக்கம் பெரியார் நினைவிடத்தில் தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டத்தை நினைவு கூறும் விதமாக 17.09.2026 பெரியாரின் 148ஆவது பிறந்த நாளன்று பிற்படுத்தப்பட்ட ஊழியர்கள் பேரமைப்பின் (National Confederation of OBC Employees Welfare Associations) சார்பில் கொண்டாடப்பட்டது.

வைக்கம் வீதிகளில் பெரியார் படத்துடன், கேரள மேளம் முழங்க ஊர்வலமாக கொள்கை முழக்கங்களுடன் தோழர்கள் அணிவகுத்தனர். வைக்கம் பொதுமக்கள் பாராட்டினர்.

பெரியார் நினைவிடத்தில் போட்டி தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சிறப்பாக நூலகம் செயல்பட்டு வருகிறது. பெரியாரின் போராட்ட வரலாற்றை வெளிப்படுத்தும் படங்களுடன் கூடிய அருங்காட்சியகமும் நினைவிட அதிகாரி செந்தில் அண்ணா அவர்களின் சீரிய ஒத்துழைப்புடன் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. கேரள அரசின் சார்பில் துணை மாவட்ட ஆட்சியர், வைக்கம் நகர்மன்றத் தலைவர் அப்துல் சலாம் ராவுத்தர், 10க்கும் மேற்பட்ட நகர் மன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.




பயணம் மற்றும் நிகழ்வினை பிற்படுத்தப்பட்ட ஊழியர்கள் பேரமைப்பின் பொதுச் செயலாளரும், தலைமைக்குழு உறுப்பினருமான அன்பு தனசேகர் ஒருங்கிணைத்தார். பேரமைப்பின் நிர்வாகிகள் சி.சேதுபதி, செல்வம் பென்னாண்டோ, செந்தாமரைக்கண்ணன், செ.அன்பரசன் உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

வைக்கம் போராட்டம் நூல் எழுதிய பழ அதியமான், ஒவ்வோர் ஆண்டும் வைக்கம் பயணத்தை முன்னெடுக்கும் தோழர் மதுரை சிவசங்கரன் ஆகியோர் பங்கேற்றனர்.

தலையங்கம்

## தனியார் பல்கலைக்கழக மசோதாவைக் கைவிட வேண்டும்!

தமிழ்நாட்டில் தவெக ஆட்சி எந்த விவாதங்களும் இன்றி அவசர அவசரமாக சமூக நீதிக்குக் குழிபறிக்கும் மாநில பல்கலைக்கழகம் மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறது.

கல்வியைத் தனியார் மயமாக்கி, விளிம்பு நிலை மக்களுக்குக் கட்டணச் சுமையைத் திணிப்பதோடு, இட ஒதுக்கீடு கொள்கைக்கும் பேராபத்தை உருவாக்கும் மசோதா இது.

தமிழ்நாட்டில் அரசு பல்கலைக்கழகங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், மத்திய பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர மாநில தனியார் பல்கலைக்கழகம் (State Private University) 2019 ஆம் ஆண்டில் அஇஅதிமுக ஆட்சியில் அறிமுகமானது.

100 ஏக்கர் நிலமும் 50 கோடி நிரந்தர வைப்புத் தொகை இருந்தால் தனியார் பல்கலைக்கழகத்தைத் தொடங்கலாம் என்று அஇஅதிமுக ஆட்சியில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் 9 பல்கலைக்கழகங்கள் இப்போது இயங்குகின்றன. 2025ல் திமுக ஆட்சி இந்த நிபந்தனைகளைத் தளர்த்த முன்வந்த போது எதிர்ப்புகள் வந்தன. திமுக ஆட்சி திட்டத்தைக் கைவிட்டது. இப்போது தவெக ஆட்சி எந்த விவாதமும் இல்லாமல் சென்னையில் 12 ஏக்கர் நிலமும், மற்ற மாநகராட்சிகளில் 18 ஏக்கர் நிலமும், இதரப் பகுதிகளில் 25 ஏக்கர் நிலமும் இருந்தாலே தனியார் பல்கலைக்கழகத்தை தொடங்கலாம் என்று மசோதா நிறைவற்றியுள்ளது. வைப்புத் தொகையும் ரூ.25 கோடியாக குறைத்துள்ளது.

இதன்படி தமிழ்நாட்டில் 400-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக மாறுகின்றன. சென்னையைச் சுற்றியே 100 பல்கலைக்கழகங்கள் உருவாகும் தகுதி பெறுகின்றன. இப்படி தனியார் பல்கலைக்கழகங்கள் புற்றீசல் போல் பரவினால் விளிம்பு நிலை மாணவர்கள் கடும் நெருக்கடியைச் சந்திப்பார்கள்.

இப்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள கல்லூரிகளுக்கு குறைந்த கட்டணம் வாங்கப்படுகிறது. 69 விழுக்காடு இட ஒதுக்கீடு உறுதியாகிறது. இந்தக் கல்லூரிகள் தனியார் பல்கலைக்கழகங்களாக இந்தச் சட்டத்தின் வழியாக மாறும் போது கட்டண வரம்பு உயர்ந்து, இட ஒதுக்கீடு உரிமையும் பறிபோகிறது.

இப்போது மாற்றியமைக்கப்பட்டுள்ள வைப்புத்தொகை ஏற்கனவே 100 ஏக்கரில் தொடங்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் பொருந்தும் என்று மசோதா கூறுகிறது. இதனால் ஒரு வளாகத்துக்குள்ளேயே 7 பல்கலைக்கழகங்களை தொடங்கலாம். தவிர 12 ஏக்கரில் தொடங்கப்படும் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி, சட்டக் கல்லூரி என்று எதை வேண்டுமானாலும் தொடங்கிக் கொள்ளலாம். இவையெல்லாம் போக, அந்த வளாகத்தில் விளையாட்டு மைதானம், விடுதி வசதி போன்றவற்றுக்கு இடம் இருக்குமா? என்றே தெரியாது.

‘மாநில அரசின் பல்கலைக்கழகங்களில் பெரும்பாலானவை, பல ஆண்டுகளாக துணைவேந்தர்கள் இல்லாமல், நிர்வாகம் முடங்கி, மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கும் நிலையில், அதைப் பற்றி அக்கறை காட்டாமல் இந்த மசோதாவுக்கு இப்போது என்ன அவசரம்? என்பதே கல்வியாளர்களின் நியாயமான கேள்வி.

ஏற்கனவே கடந்த 25 ஆண்டுகளாக நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் தனியார் பல்கலைக்கழகங்களே அதிகம். இந்த பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீட்டுக்கான இடங்கள் குறைவு. கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

அனைத்து அரசியல் கட்சிகளிலும் கல்வி வணிகம் நடத்தும் தலைவர்கள் இருப்பதால் இந்த மசோதாவுக்கான எதிர்ப்புகள் புறந்தள்ளப்படுகின்றன.

இந்தப் புதிய மசோதாவின் வழியாக சமூகநீதியின் நோக்கத்தை தமிழ்நாடு அரசு சிதைக்கிறது. இந்த மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். தமிழ்நாடு அரசு இந்த மசோதாவைக் கைவிட வேண்டும்.

# பிரதமர் அலுவலகமா? பார்ப்பன பாதுகாப்பு அலுவலகமா?

ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் மநுசாஸ்திரத்துக்கும் பார்ப்பனர்களுக்கும் எதிரான பாடத்திட்டங்கள் இடம்பெற்று இருக்கின்றதா? என்று விளக்கம் கேட்டு பல்கலைக்கழகங்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பி இருக்கிறது பிரதமர் அலுவலகம். கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி பெயர் குறிப்பிடாத செய்தி ஒன்று முகநூலில் பதிவிடப்பட்டிருந்தது. அதில் பல உயர்கல்வி நிறுவனங்களில் அம்பேத்கர், ஜோதிராவ் பூலே போன்ற தலைவர்களின் ஜாதி, மத எதிர்ப்பு சிந்தனையின் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. பாட நூல்களிலும் இடம்பெற்றுள்ளன என்றும், ஆண் ஆதிக்கம், ஜாதி ஒழிப்பு என்ற பெயரில் பார்ப்பன எதிர்ப்பும் மநுசாஸ்திர எதிர்ப்பும் மாணவர்களிடம் திணிக்கப்படுகிறது என்றும் இந்த விஷம் பரப்பும் கருத்துக்களை நிறுத்த வேண்டும் என்றும் பதிவிடப்பட்டிருந்தது.

பெயர் குறிப்பிடாத இந்தப் பதிவை உடனடியாக கவனத்தில் எடுத்து பிரதமர் அலுவலகம் அடுத்த நாளில் செப்-27 உயர் கல்விநிறுவனங்களிடம் இது குறித்து மின்னஞ்சல் வழியாக விளக்கம் கேட்டுள்ளது பிரதமர் அலுவலகம். பார்ப்பனர்கள் பாதுகாப்பு அலுவலகமாக செயல்படுகிறது.

(‘இந்து ஆங்கில நாளேடு’ செப்-30 அன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது)

## தார்க்காடு கழகத் தோழர்களின் களப்பணி; கழகத் தலைவர் பாராட்டு!

கொளத்தூர் ஒன்றியம், தார்க்காடு கிளைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் 148 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் 17.09.2026 மாலை 6.00 மணியளவில் தார்க்காடு பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. தார்க்காடு கிளைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். தார்க்காடு பகுதித் தோழர்கள் முரளி, பாரதி கண்ணன், அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அன்பரசு வரவேற்புரை ஆற்றினார். மேட்டூர் டி.கே. ஆர்.இசைக்குழுவின் பகுத்தறிவு பாடல்களுடன் பொதுக்கூட்டம் தொடங்கியது.

பள்ளி குழந்தைகளுக்கான தனித்திறன் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆர்வமுடன் கலந்து கொண்ட குழந்தைகள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், மாவட்டப் பொருளாளர் சம்பத் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

தோழர் பெரியார் நம்பியின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்வு கிராம மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பொதுக்கூட்ட மேடையில் அரியலூர் மாவட்டம் சிலால் கிழக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த கார்த்திகா, அரியலூர் மாவட்டம், அணைகுடம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணராஜன் ஆகியோரின் ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை ஏற்று நடத்தி வைத்தார்.சிறப்பு அழைப்பாளர்களாக திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் மிதுன் சக்கரவர்த்தி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்டத் துணை தலைவர் சக்திவேல், திமுக வழக்கறிஞர் சரவண பரத் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில்: இதே பகுதியில் தார்க்காடு கிளைத் தலைவர் ராஜேந்திரன், கொளத்தூர் ஒன்றியத் தலைவர் தர்மலிங்கம், குமரேசன், ஆசிரியர் ராமசாமி, விஜயகுமார் ஆகிய தோழர்களே இருந்த நிலையில் இன்றைக்கு 10-க்கும் மேற்பட்ட புதிய தோழர்களை அன்பரசு, அன்பழகன், சண்முகம், பாரதி கண்ணன், நாத்திக மணி, தினேஷ், முரளி, பிரபாகரன் ஆகியோரை உருவாக்கி ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியை நடத்துகிற அளவுக்கு தோழர்கள் பணியாற்றி இருக்கிறார்கள் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள் எனக் குறிப்பிட்டார்.

மேடையின் இருபுறமும் கிராம மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்வை ஆர்வமுடன் கவனித்தனர். ஏரிக்காடு பெரியார் நகர் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் சார்பாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூபாய் 50,000 த்தை கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கினர். தார்க்காடு பகுதியில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட அனைவருக்கும் கழகத் தலைவர் அவர்களால் மேடையில் நினைவு பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.

தார்க்காடு பகுதி மறைந்த தோழர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தொண்டினைப் போற்றும் வகையில் மேடைக்கு அவர் பெயர் சூட்டப்பட்டு, அவரது குடும்பத்தாரை அழைத்து சிறப்பு செய்யப்பட்டது. இரவு உணவு கொளத்தூர் நகர கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டது. ரூ.3,500 மதிப்புள்ள பரிசுபொருட்களை சேலம் மாவட்டப் பொருளாளர் சம்பத்குமார் அன்பளிப்பாக வழங்கினார். இறுதியாக தினேஷ் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. இந்த நிகழ்வை தார்க்காடு கிளைக் கழக தோழர்கள் அன்பரசு, சண்முகம், தினேஷ், அன்பழகன், பாரதிக்கண்ணன், குமரேசன் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.

## பனாரஸ் பல்கலை.யில் பஞ்சாங்க வகுப்புகளாம்!

உத்தர பிரதேசத்தின் பழம்பெரும் கல்விநிலையமாக இருப்பது பனாராஸ் இந்து பல்கலைகழகம் (பிஎச்யு). இங்கு ஜோதிடக் கல்வித்துறை சுமார் 4 வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்டது. சம்ஸ்கிருத வித்யா தர்ம விஞ்ஞானப் புலத்தின் கீழ் செயல்படும் இத்துறையில் மாணவர்களுக்கு ஜோதிடப் பட்டத்திற்கான கல்வி போதிக்கப்படுகிறதாம். இதன் அங்கமாக, தற்போது மேம்படுத்தப்பட்ட ஜோதிடப்பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு இப்போது சிறப்புச் சேவைகளை வழங்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதில், ஜாதகம் பார்ப்பது முதல் சடங்குகள் வரை 8 வகையான சேவைகள் வெளிநபர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கவுள்ளன. ஜோதிடத் துறையின் ‘பஞ்சாங்கப் பிரிவு’ அலுவலகத்தில், இதற்கென பிரத்யேகமான குளிரூட்டப்பட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் ஒருங்கிணைப்பாளராக பேராசிரியர் வினய் பாண்டே அமர்த்தப்பட்டுள்ளார். ஜாதகம், நல்ல நாட்கள், திருமணப் பொருத்தம், வாஸ்து அடிப்படையிலான நிலத் திட்டம், மண் மேம்பாடு, ரத்தினக் கற்கள் மற்றும் சடங்குகள் குறித்த தகவல்களைத் தேடும் மக்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள் இங்கு வழங்கப்படுகின்றனவாம்.

சடங்குகள் தொடர்பான ஆலோசனைக்கு ரூ.250, நல்ல நேரம் அறிய ரூ.100, பேராசிரியராக உள்ள ஜோதிடரை மாவட்டத்திற்கு வெளியே அழைத்துச் செல்ல ரூ.21,000, மாவட்டத்திற்குள் அழைத்துச் செல்ல ரூ.11,000 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாகனச் செலவுகளைத் தனியாகச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணத்தில் 50% ‘தட்சணை’ (கவுரவ ஊதியம்) அடங்கும். இதுகுறித்து பிஎச்யுவின் ஜோதிடக் கல்வித்துறையின் தலைவர் பேராசிரியர் சத்ருகன் திரிபாதி கூறுகையில், ‘ஒவ்வொரு நபரும் தங்கள் பிரச்சினைக்கான தீர்வைக் காண வருவதால், இத்தகைய சிறப்பு ஆலோசனை மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

ஜன்ம குண்டலி (பிறப்பு ஜாதகம்), வர்ஷ குண்டலி (வருடாந்திர ஜாதகம்) மற்றும் பிரஷ்ன குண்டலி (கேள்விக்கான ஜாதகம்) ஆகியவற்றின் மூலம் எதிர்காலத்தைத் தெரிந்துகொள்ளலாம். இதற்கான கட்டணத்தில் 50% ஜோதிடருக்கு தட்சணையாக வழங்கப்படும். மீதமுள்ள தொகை துறை மற்றும் பிற செலவுகளுக்காக ஒதுக்கப்படும்" என்றார். உருப்படுமா இந்த நாடு?

# பெரியார் காந்தி நேரடி விவாதம்

***இந்து மதத்தை மாற்ற முயற்சித்தால் பார்ப்பனர்கள் உங்களை விட்டு வைக்க மாட்டார்கள் என்று பெரியார் காந்தியிடம் எச்சரித்தார்***

சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கிக் கொண்டிருந்த நேரத்திலும் பெரியாருக்கு காந்தி மீதிருந்த மரியாதையும், கதர் பிரச்சாரத்திலிருந்த நம்பிக்கையும் குறையவில்லை. அவரைப் பொறுத்தவரை மனதளவில் காங்கிரஸ்காரராகவே இருந்தார்.

ஆனால் 1927ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ‘சுதேசமித்திரன்’ நாளிதழில் வெளியான காந்தியின் வர்ணாசிரம தர்மத்தை ஆதரித்து பேசிய உரை ஒன்று, பெரியாரை அதிர்ச்சியடையச் செய்துவிட்டது. பெங்களூரில் காந்தியுடன் பெரியார் நடத்திய உரையாடல் குறித்து பெரியார் ‘குடிஅரசு’ ஏட்டில் (28.8.1927) எழுதிய ஒரு தலையங்கத்தில் சில செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார். காந்தியுடன் தாம் நிகழ்த்திய சந்திப்பை பெரியார் வெளிப்படுத்தாமல் இருந்தது பற்றி அத்தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“நமது கருத்தையும், மகாத்மா கருத்துக்கும் நமது கருத்துக்கும் இருந்த மாறுபட்ட கருத்துகளைப் பற்றியும் சென்ற மாதம் மகாத்மா அவர்களிடம் நேரில் கலந்து பேசி நம்மைப் பொருத்த வரையிலும் ஒரு முடிவு கட்டிக் கொண்டே வந்து விட்டோம். “மகாத்மாவிடம் நான் கலந்து பேசினேன்” என்று சொல்லிக் கொள்வதும் எழுதிக் கொள்வதும் இக்காலத்தில் பெரிதும் தற்பெருமைக்கே உபயோகித்துக் கொள்ளக் கூடியதாய் விட்டபடியால் அந்தத் தற்பெருமை நமக்கு வேண்டாம் என்று கருதியே நாம் அது சமயம் அதை வெளிப்படுத்திக் கொள்ள வில்லை” என்று குறிப்பிடுகிறார். மேலும் இந்த உரையாடலை காந்தி வெளியிட வேண்டாம் என்று பெரியாரிடம் கேட்டுக் கொண்டதாலும் பெரியார் அதை வெளியிடவில்லை என்ற கருத்தையும் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.”

“தவிரவும் அது சமயம் நமக்கும் மகாத்மாவுக்கும் நடந்த சம்பாஷணைகளின் விவரத்தை மகாத்மாவின் சம்மதம் பெற்றே வெளிப்படுத்த வேண்டிய ஒரு நிபந்தனைக்கும் நாம் சம்மதம் கொடுத்து வந்ததால் அதையும் வெளியிடாத நிலையில் இருக்கிறோம்” - என்று குறிப்பிடுகிறார். இதற்குப் பிறகு 1927ஆம் ஆண்டு நடந்த இந்த உரையாடல் காந்தியின் மறைவுக்குப் பிறகுதான் 18.2.1948 ‘விடுதலை’ நாளேட்டில் வெளியிடப்பட்டது.”

பெரியாருக்கும் காந்திஜிக்குமிடையே நடைபெற்ற உரையாடல் சுவையானதாகும். அதன் ஒரு பகுதியை இங்கே காணலாம்.

**பெரியார்** : இந்து மதம் மறைய வேண்டும்.

**காந்தி** : ஏன்?

**பெரியார்** : இந்து மதம் என்று எதுவும் கிடையாது.

**காந்தி** : இருக்கிறது.

**பெரியார்** : அது பிராமணர்கள் உருவாக்கிய பிரம்மை.

**காந்தி** : அனைத்து மதங்களும் அதைப் போன்றதுதான்.

**பெரியார்** : இல்லை. இதர மதங்களுக்கு வரலாறு, இலட்சியங்கள், கோட்பாடுகள் உள்ளன. மக்கள் அவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**காந்தி** : இந்து மதத்தில் அத்தகையது எதுவும் இல்லையா?

**பெரியார்** : சொல்வதற்கு என்ன இருக்கிறது? பிராமணன், சூத்திரன், வைசியன் போன்ற ஜாதிய உட்கூறுகள் தவிர அதில் வேறெந்த விதியோ, சான்றோ கிடையாது.

**காந்தி** : அது குறைந்தபட்சம் இந்தக் கோட்பாட்டைக் கொண்டுள்ளது.

**பெரியார்** : இருந்தும் என்ன பயன்? அதன்படி பிராமணர்கள் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள். நீங்களும், நானும் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள்.

**காந்தி** : நீங்கள் சொல்வது தவறு. வர்ணாசிரம தர்மத்தில் தாழ்ந்த ஜாதி என்றும், உயர்ந்த ஜாதி என்றும் எவ்வித தாரதம்மியமும் கிடையாது.

**பெரியார்** : நீங்கள் இதைச் சொல்லலாம். ஆனால் நடைமுறையில் அது வேறுவிதமாக இருக்க முடியாது.

**காந்தி** : இல்லை - சமத்துவம் இருக்கிறது.

**பெரியார்** : இந்துமதம் இருக்கும் வரை இதை யாரும் பெற முடியாது.

**காந்தி** : இந்துமதத்தின் மூலமாக எவரும் இதைப் பெறமுடியும்.

**பெரியார்** : அப்படியானால் பிராமணர்-சூத்திரர் வேறுபாட்டை நிரூபிக்கும் மதச் சான்றுகள் குறித்து என்ன சொல்வது?

**காந்தி** : இந்து மதம் இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு சான்றுகள் இல்லை என்றுதானே நீங்கள் வாதாடுகிறீர்கள்?

**பெரியார்** : மதம் என்று எதுவும் கிடையாது. எனவே அதை நிரூபிக்கச் சான்றுகளும் கிடையாது என்றுதான் நான் சொல்லி வருகிறேன். மதம் இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டால், அதை நிரூபிக்கும் சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

## காந்தி பிறந்தநாள் சிந்தனை

**காந்தி** : நாம் மதத்தை ஏற்றுக் கொண்டு சான்றுகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

**பெரியார்** : அது சாத்தியமற்றது. மதம் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டால் நாம் எதையும் மாற்ற முடியாது அல்லது மாற்றியமைக்கவும் முடியாது.

**காந்தி** : இதர மதங்களைப் பொறுத்தவரை நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், இந்து மதத்தைப் பொறுத்தவரை சரியல்ல. அதை ஏற்றுக் கொண்டபின் அதன் பெயரால் நீங்கள் எதையும் செய்யமுடியும். அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

**பெரியார்** : நீங்கள் இதை எப்படிச் சொல்ல முடியும்? யார் அதை ஏற்றுக் கொள்வார்கள்? அதில் நீங்கள் முன்னோடிப் பங்கை ஆற்ற முடியுமா?

**காந்தி** : நீங்கள் சொல்வதெல்லாம் சரி தான். இந்து மதம் என்று எதுவுமில்லையென்று நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கென்று திட்டவட்டமான விதி இல்லையென்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதனால் தான் இந்துக்கள் என்று நம்மை நாம் கூறிக்கொள்வதின் மூலம் நாம் விரும்பும் முறையில் அதற்காக பொதுவான இலட்சியங்களை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும். இந்து மதம் மட்டுமே மக்களை நல்ல வழிகளுக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும்; ஏனென்றால் இதர மதங்களுக்கென்று கோட்பாடு, வரலாறு மற்றும் இதர சான்றுகள் உள்ளன; அதை யாராவது மாற்றினால் ஒழிக்கப்பட்டே விடுவார்கள்; கிறிஸ்துவர்கள் ஏசுநாதர் கூறியபடி நடந்து கொள்ளவேண்டும். அதே போன்று முஸ்லீம்கள், முகம்மது நபியும், குரானும் சொல்வதுபோல வாழவேண்டும். அதை மாற்றுவதற்கு ஏதேனும் முயற்சி செய்யப்படுமேயானால் அது மதத்தின் கட்டளைகளுக்கு மாறானதாகும். அவ்வாறு இல்லை என்று கூறுபவர்கள் மதத்துக்கு வெளியே வந்து பிரகடனம் செய்யலாம்; ஆனால் உள்ளிருந்து கொண்டே, அதை மறுக்கமுடியாது. இதர மதங்களின் உண்மையான நிலமை இதுதான். ஆனால், அவர்களைப் போல் அல்லாது இந்து கோட்பாட்டில் எவர் ஒருவரும் முன்னால் வந்து தயக்கமின்றி எதையும் போதிக்க முடியும். இந்து மதத்திலிருந்து பல மகத்தான மனிதர்கள் தோன்றி, பல விஷயங்களைக் கூறியுள்ளனர். எனவே இந்து மதத்தில் இருக்கும்பொழுதே, நாம் அதை மாற்ற முடியும். மனித குலத்தின் நன்மைக்காக பல விஷயங்களைச் செய்ய முடியும்.



**பெரியார்** : மன்னிக்கவும். அதைச் செய்ய முடியாது.

**காந்தி** : ஏன்?

**பெரியார்** : இந்து மதத்திலுள்ள சுயநலக்கும்பல் அவ்வாறு செய்ய உங்களை அனுமதிக்காது.

**காந்தி** : நீங்கள் ஏன் இவ்வாறு கருத வேண்டும?இந்து கோட்பாட்டில் தீண்டாமை இல்லையென்ற அம்சத்தை இந்துக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

**பெரியார்** : கொள்கையை ஏற்றுக் கொள்வதிலும், அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலும் வித்யாசம் உண்டு. எனவே அதை கடைப்பிடிப்பது சிரமமானதாகும்.

**காந்தி** : நான் அதைச் செய்கிறேன். கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதை நீங்கள் கண்டீர்களா?

**பெரியார்** : நான் புரிந்து கொள்கிறேன். ஆனால், அடிப்படையில் எந்த மாற்றமும் இல்லை. அதெல்லாம் உங்கள் செல்வாக்கினாலும், அவர்களுக்கு நீங்கள் தலைமை தாங்கவேண்டிய அவசியத்தினாலும் ஏற்பட்டது என்பதுடன் சுயநலத்தின் காரணமாக நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வது போல் நடிக்கிறார்கள். அதற்குப் பதிலாக நீங்கள் அவர்களை நம்புகிறீர்கள்.

**காந்தி** : (சிரித்துக் கொண்டே) யார் அவர்கள்?

**பெரியார்** : பிராமணர்கள் அனைவரும்.

**காந்தி** : உண்மையிலேயா?

**பெரியார்** : ஆம்.

**காந்தி** : உண்மையாகவா?

**பெரியார்** : ஆம். அந்த விஷயத்தில் உங்களோடு கூட வரும் பிராமணர்கள் அனைவரும்.

**காந்தி** : அப்படியானால் எந்த பிராமணரையும் நீங்கள் நம்புவதில்லையா?

**பெரியார்** : என்னை ஈர்ப்பதில் அவர்கள் தோல்வி அடைந்துவிட்டனர்.

**காந்தி** : ராஜகோபாலாச்சாரியைக் கூட நீங்கள் நம்புவதில்லையா?

**பெரியார்** : அவர் நல்லவர், நேர்மையானவர், தியாகம் செய்யும் மனிதர். ஆனால் இந்த நற்குணங்கள் அனைத்தும் அவர் சமூகத்திற்கு சேவை செய்ய அவருக்கு உதவுகிறது. அவர் சுயநலம் அற்றவர். ஆனால் நான் என் சமூகத்தின் நலனை அவருடைய நலன்களுக்கு அடகு வைக்க முடியாது.

**காந்தி** : இதைக் கேட்க வியப்பாக இருக்கிறது. பிரச்சனை அதுதான் என்றால், உலகில் ஒரு நேர்மையான பிராமணனைத் தேடிக் கண்டு பிடிப்பது என்பது மிகுந்த சிரமமானது என்பதுதான் உங்கள் கருத்தா?

**பெரியார்** : இருக்கலாம், அல்லது இல்லாமலிருக்கலாம். நான் யாரையும் பார்க்கவில்லை.

**காந்தி** : அவ்வாறு சொல்லாதீர்கள். நான் ஒரு பிராமணனைப் பார்த்தேன். அவர் ஒரு சிறந்த பிராமணர் என்றே இன்றும் கருதுகிறேன். அவர்தான் கோபால கிருஷ்ணகோகலே.

**பெரியார்** : ஓ! உங்களைப் போன்ற மகாத்மாவுக்கு இந்த உலகத்தில் ஒரே ஒரு நல்ல பிராமணரைக் கண்டு பிடிப்பது சாத்தியமாகியிருக்கலாம். ஆனால் என்னைப் போன்ற சாதாரணமான பாவிகளுக்கு ஒரு நல்ல பிராமணரைக் கண்டுபிடிப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

**காந்தி** : (சிரித்துக் கொண்டே) உலகமானது எப்பொழுதும் அறிவு ஜீவிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. பிராமணர்கள் படித்த மக்கள். அவர்கள் என்றென்றும் இதரர்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவார்கள். எனவே, அவர்களை விமர்சிப்பதால் எவ்வித பயனுள்ள காரியமும் ஏற்படப் போவதில்லை. இதரர்களும் அந்த மட்டத்தை அடைய வேண்டும்.

**பெரியார்** : இதர மதங்களில் இத்தகைய மனிதர்களை நாம் காண முடிவதில்லை. இங்கே இந்த மதத்தில் மட்டுமே பிராமணர்கள் அறிவு ஜீவிப் பகுதியை பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். மீதமுள்ள 90 விழுக்காட்டினர் கல்வியறிவு அற்றவர்களாகவோ அல்லது அப்பாவிகளாகவோ இருக்கிறார்கள். எனவே ஒரு சமூகத்தில் ஒரு பகுதி மக்கள் மட்டுமே அறிவு ஜீவிகளாகவும், படித்த குழுவாகவும் இருப்பது அந்தச் சமூகத்திலுள்ள இதர பகுதி மக்களின் நல்வாழ்வுக்கு ஊறு விளைவிக்கக்கூடியது இல்லையா? எனவேதான், இந்த நிலமைக்கு பிரதான காரணமாக உள்ள மதம் என்பது தொலைந்து போக வேண்டும் என நான் தொடர்ச்சியாகக் கூறி வருகிறேன்.

**காந்தி** : உங்கள் நிலைப்பாடு என்ன? இந்து மதத்தையும் அதைப் போன்ற சமூகத்திலிருந்து பிராமணர்களையும் ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதற்காக நீங்கள் நிற்கிறீர்கள் என்று நான் கருதலாமா?

**பெரியார்** : போலித்தனமான இந்து மதம் ஒழிந்தால், பிராமணர் எவரும் இருக்கமாட்டார். நாம் சூத்திரர் வருணத்தைச் சேர்ந்தவர்கள் அனைத்துமே பிராமணர் பிடியில்தான் உள்ளன.

**காந்தி** : அது சரியல்ல. அவர்கள் இப்போது நான் கூறுவதைக் கேட்க மாட்டார்களா? இந்தக் கோட்பாட்டின் கீழ் ஒன்றுபட்டுள்ள நாம் அதனுடைய எதிர்மறையான அம்சங்களை இப்பொழுதும் அகற்ற முடியும்.

**பெரியார்** : இதை நீங்கள் சாதிக்க முடியாது என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து. அப்படி நீங்கள் சாதிக்க முடிந்தாலும், எதிர் காலத்தில் உங்களைப் போன்ற சில மகத்தான மனிதர்கள் தோன்றி நீங்கள் செய்த வேலையை மாற்றிவிடுவார்கள்.

**காந்தி** : அது எவ்வாறு சாத்தியம்?

**பெரியார்:** நீங்கள் முன்பு கூறியது போல, இந்து மதத்தின் பெயரால் எவர் ஒருவரும் தன்னுடைய சிந்தனை வழிக்கேற்ப மக்களைக் கொண்டுவர முடியும். அதே வழியில் நாளை தோன்றக் கூடிய ஒரு மகத்தான மனிதன் இந்துக் கோட்பாட்டின் பெயரால் எதையும் செய்ய முடியும்.

**காந்தி** : எதிர்காலத்தில் எவரொருவரும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் முயற்சி நடைமுறைச் சாத்தியமற்றது இல்லையா?

**பெரியார்** : இதைக் கூறுவதற்கு என்னை மன்னிக்கவேண்டும். இந்து மதத்தின் உதவியோடு ஸ்தூலமாக எதையும் செய்வது உங்களுக்குச் சாத்தியமற்றது. மாற்றத்தைச் செய்ய பிராமணர்கள் உங்களை விடமாட்டார்கள். அவர்களுடைய நலன்களுக்கு எதிராக நீங்கள் வேலை செய்வதாக அவர்களுக்குத் தெரிந்தால், உங்களை எதிர்த்துப் போராடத் துவங்கி விடுவார்கள். அத்தகையதொரு மாற்றத்தைச் செய்ய இதுவரை எந்த மகத்தான மனிதரும் முயற்சிக்கவில்லை. யாராவது அதற்காக முயற்சித்தால் பிராமணர்கள் அவரைச் சும்மா விடமாட்டார்கள்.

**காந்தி** : நீங்கள் பிராமணர்களுக்கெதிராக வெறுப்பைக் கொண்டுள்ளீர்கள். அதுதான் உங்கள் சிந்தனையில் பிரதானமாக நிற்கிறது. நம்முடைய விவாதம் மூலம் நாம் இதுவரை எவ்வித உடன்பாட்டுக்கும் வரவில்லை. எனினும் எதிர்காலத்தில் இரண்டு அல்லது மூன்று முறை நாம் சந்தித்துப் பேசுவோம். நமது நிலை குறித்து தீர்மானிப்போம்.

***‘நிமிர்வோம்’ அக்டோபர்-2017 இதழிலிருந்து...***

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# பெரியாரின் போராட்டங்கள்

## கள்ளகுறிச்சியில் கழகத்தலைவர் உரை!

கள்ளக்குறிச்சியில் பெரியாரின் 148-வது பிறந்தநாளை ஒட்டி கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகத்தின் சார்பாக 28.09.2026 திங்கட்கிழமை அன்று மதியம் 3.00 மணி அளவில் சங்கராபுரம் வாசவி திருமண மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது.



ந. வெற்றிவேல் (கள்ளக்குறிச்சி மாவட்ட துணைச் செயலாளர்) தலைமையேற்று, உரையாற்றினார். ந. அய்யனார் (கழகத் தலைமைக்குழு உறுப்பினர்) அமைப்பின் முக்கியத்துவமும், நோக்கமும் என்ற தலைப்பில் ஜாதிய ஏற்றத்தாழ்வுகளையும் தீண்டாமையையும் எதிர்த்துப் போராடவும், விளிம்பு நிலை மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் எனவும், மூடநம்பிக்கை ஒழிப்பு, சமூகநீதி, பெண் விடுதலை போன்றவற்றை அமைப்பின் நோக்கமாகக் கருதி தோழர்கள் இயக்கப்பணிகளைச் செய்ய வேண்டும், இல்லையேல் முடிந்த அளவுக்கு உதவிகளைச் செய்து இயக்கப் பணிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறி கருத்துரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி வரலாற்றில் பெரியார் தொண்டர்களின் கொள்கைப் பிடிப்பும், அர்ப்பணிப்பும் என்ற தலைப்பில் சட்ட எரிப்புப் போராட்டம், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம், பிராமணாள் உணவகப் பெயர் அழிப்பு ஆகிய போராட்டங்களிலும் மற்றும் கொள்கைப் பணியில் பெரியாரும், பெரியாரின் தொண்டர்களும் எப்படி நேர்மையாகவும், ஒழுக்கமாகவும், துடிப்புமிக்கவர்களாகவும், கண்ணியமாகவும் இருந்தார்கள் என்பதைக் குறித்தும், தமிழர் உரிமைப் போராட்டம் எடுக்கிற போதெல்லாம், வடவர் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுங்கள் என்று பெரியார் கூறியதைப் பற்றியும், பாரதிதாசன் பார்ப்பானுக்கு எந்தவித உதவியும் செய்யமாட்டேன் எனக் கூறியதைக் குறித்தும் மிக விரிவாக விளக்கத்தைக் கூறி கருத்துரையாற்றினார். இந்நிகழ்வில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைப் பொறுப்பாளர் தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கணியூரில் சிந்தனையைத் தூண்டிய பெரியார் கருத்தரங்கம்

திருப்பூர்: மடத்துக்குளம் ஒன்றியக் கழகம் சார்பாக கருத்தரங்கம் 19.09.2026 சனிக்கிழமை மாலை 5.30 முதல் இரவு 9.00 மணி வரை ஓம் முருகா திருமண மண்டபம் கணியூரில் நடைபெற்றது.




மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் தலைமை தாங்கினார். மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் முன்னிலை வகித்தார். மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சி.சிவானந்தம் வரவேற்புரை ஆற்றினார். திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு அறிமுக உரை நிகழ்த்தினார். கழகப் பொருளாளர் சு.துரைசாமி நோக்கவுரையாற்றினார். சடங்குகள் என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சிவகாமி கருத்துரையாற்றினார். தலைமைக்கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி மூடநம்பிக்கை என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் வெண்மணி தந்தை பெரியாரும், புரட்சியாளர் அம்பேத்கரும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். வெண்மணி அவர்களுக்கு அக்கினி கோத்திரம் தாத்தாச்சாரி எழுதிய 'சடங்குகளின் கதை' என்ற நூலை திருப்பூர் மாநகர அமைப்பாளர் சரசுவதி, மடத்துக்குளம் செல்வி ஆகியோர் வழங்கினார்கள். சரவணன், நன்றி கூறினார். மடத்துக்குளம் ஒன்றியக் கழகத் தோழர்கள் கருத்தரங்கிற்கான பணிகளை மேற்கொண்டனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக க.தங்கவேல் (மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் திதக), வழக்கறிஞர் முருகேசன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை), க்(மாநில இளைஞர் அணிச் செயலாளர்-திதக), இராமச்சந்திரன்(மாவட்டச் செயலாளர் திதக) கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் மடத்துக்குளம் இராசேந்திரன், பரிமளராசன்(சமூக ஊடகப் பொறுப்பாளர்-திவிக), மடத்துக்குளம் சங்கீதா ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

# ஆதித்தமிழர் பேரவை நடத்திய வீரவணக்கப் பேரணி!

திருப்பூர்: 26.09.2026 சனிக்கிழமை காலை 11 மணி அளவில் பூங்கா சாலை, எம்ஜிஆர் சிலை அருகில், அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு போராளி நெருப்பு தமிழன் "நீலவேந்தன் நினைவு நாளில்" "2009 முதல் 2026 வரை அருந்ததியர் உள்இடஒதுக்கீடு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட தமிழ்நாடு அரசை வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவை நடத்திய வீரவணக்கப் பேரணியில் கழகப் பொருளாளர் துரைசாமி வீரவணக்க உரையாற்றினார்.



நிகழ்வில் பரிமளராசன் முகநூல் பொறுப்பாளர், மாரிமுத்து மாநகர துணைத் தலைவர், முத்து மாநகர அமைப்பாளர், அய்யப்பன் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோவையில் கொள்கைப் பரப்புரை தெருமுனைக் கூட்டங்கள்



பெரியாரின் 148 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாவட்டக் கழகம் மற்றும் விசிக இணைந்து 23/9/2026 புதன் கிழமை மாலை 4 மணிக்கு சுல்தான்பேட்டை பேருந்து நிறுத்தம் முன்பும் 6:30 மணிக்கு செஞ்சேரிமலை ஆட்டோ ஸ்டாண்ட் முன்பும் தெருமுனைக் கூட்டமாக நடத்தினர். சுல்தான்பேட்டை பேருந்து நிறுத்தம் முன்பு விசிக பொறுப்பாளர் விடுதலைச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கோவை கிருஷ்ணன் பகுத்தறிவுப் பாடலை பாடினார். திருப்பூர் முத்து, நீலம் பண்பாட்டு மையம் வழக்கறிஞர் சூர்யகுமார், சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக சமூகவலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன் பெரியாரின் போராட்டங்களால் தமிழர்கள் அடைந்த நன்மைகளை விளக்கி நிறைவுரையாற்றினார். திருப்பூர் ஈழமாறன் நன்றி கூறினார். கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் செம்பருதி தேநீர் வழங்கினார்.

2-வது கூட்டம் செஞ்சேரிமலையில் விசிக தங்கவளவன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக சமத்துவத்தை வலியுறுத்தும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. தொடர்ந்து சந்திரன் விசிக வரவேற்புரையாற்றினார். திராவிட தமிழர் கட்சி லட்சுமி, தமிழ்ப் புலிகள் கட்சி சிகாவுதீன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சந்திரன், விடுதலைச் செல்வன் விசிக மற்றும் கழகத் தோழர்கள் திருப்பூர் முத்து சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். நிர்மல்குமார் தன் உரையில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் நடத்திய பண்பாட்டுப் புரட்சிகளையும் பெரியாரின் ஜாதி,மத,கடவுள் எதிர்ப்பை விளக்கிப் பேசினார். நிறைவாக கழகப் பொருளாளர் துரைசாமி பார்ப்பனியக் கொடுமைகளையும் பிற்படுத்தப்பட்டவர்கள் இட ஒதுக்கீட்டில் அடைந்த பயனையும் கல்வியின் சிறப்பையும் விளக்கி நிறைவுரையாற்றினார்.

நிகழ்வில் ஆதித்தமிழர் பேரவை பிரபாகரன், ஜாதி ஒழிப்பு முன்னணி செல்வராஜ், திராவிட தமிழர் கட்சி பேரறிவாளன், தமிழ்ப் புலிகள் கட்சி சந்திரன், கழகத் தோழர்கள் அனுப்பபட்டி கோவிந்தராஜ், செம்பருதி திருப்பூர் தோழர்கள் குணா, ரவி ,அய்யப்பன், பல்லடம் சண்முகம் மற்றும் பகுதி மக்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட தோழர்களுக்கு பெரியார் அம்பேத்கரிய நூல்கள் நிகழ்ச்சியின் நினைவாக வழங்கப்பட்டது.

# பவானியில் இளைய தலைமுறையின் கலந்துரையாடல்

Gen-Z இளைய தலைமுறைகளை ஈர்க்கும் வகையில் திராவிட இயக்க சிந்தனையாளர்கள் சார்பாக கலந்துரையாடல் நிகழ்ச்சி 20.09.2026 காலை 10.00 மணி அளவில் ஈரோடு பவானியில் உள்ள பெஸ்ட் மஹாலில் நடைபெற்றது. சிந்தூரி இளங்கோவன் (பவானி நகர மன்றத் தலைவர்) வரவேற்புரையாற்றினார்.




என். நல்லசிவம் (தி.மு.க. ஈரோடு மேற்கு மாவட்டச் செயலாளர்) எந்த ஒரு கருத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாமல், அதன் வரலாறு என்ன?, அது ஏன் முன்வைக்கப்பட்டது?, சமூகத்தில் அதன் தாக்கம் என்ன? என்பதை இளைஞர்கள் கேள்வி கேட்டு ஆய்வு செய்ய வேண்டும் எனவும், நாம் இளைய சமுதாயத்தை ஊக்குவித்து அரசியல் படுத்த வேண்டும் என உரையாற்றினார். கவிஞர் கோனூர் வைரமணி (தி. மு. க. பேச்சாளர்), நந்தகுமார் (தி. மு. க. இளம்பேச்சாளர்), வடிவேல் (மொழிப்போர் தியாகி) ஆகியோர் உரையாற்றினர்.

அதர்மம் மனோஜ்குமார் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்) பேசுகையில் ஜென்சி இளைஞர்கள் சமூக ஊடகங்களில் வரும் குறுகிய காணொளிகள் அல்லது பரபரப்பான பதிவுகளை மட்டும் நம்பாமல், வரலாற்று நூல்கள், தலைவர்களின் உரைகள், அரசியல் ஆவணங்கள் ஆகியவற்றையும் படிக்க வேண்டும். சமூகநீதி குறித்த விவாதங்களில் பங்கேற்க வேண்டும் எனவும், நாம் கையில் எடுக்க வேண்டிய ஆயுதமாக சமூக வலைதளங்களில் இளைஞர்களுக்கு, நம் கொள்கைகளைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறி சிறப்புரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் திராவிட இயக்கம் உருவான வரலாறு, பெரியார் முன்வைத்த சுயமரியாதை மற்றும் பகுத்தறிவு கருத்துகள், அண்ணா வலியுறுத்திய சமூகநீதி மற்றும் மாநில உரிமைகள் போன்ற சிந்தனைகளை இன்றைய தலைமுறைக்கு புரியும் வகையில் எடுத்துக் கூறியும், நீதிக்கட்சி தமிழ்நாட்டு மக்களுக்காற்றிய பங்கு குறித்தும் நிறைவுரையாற்றினார். இறுதியாக வழக்கறிஞர் நவீன்குமார் (தி. மு.க.) நன்றி கூறினார். நிகழ்ச்சியை பவானி பூபதிராஜா தி.மு.க. ஏற்பாடு செய்தார். ப.ரத்தினசாமி (கழக மாநில அமைப்புச் செயலாளர்), காவை ஈஸ்வரன் (தலைமைக் குழு உறுப்பினர்), ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் தி.மு.க. பொறுப்பாளர்களும், கலந்துகொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 08, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran